பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 10 2026** **MONDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

# தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ஸ்விட்சர்லாந்து அதிபர் திரு. **Guy Parmelin**-னுடன் இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

2. இந்தியா — அமெரிக்கா இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. சீக்கிய குரு, குருநானக் தேவ் முக்தியடைந்த நாளான இன்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

4. கரீபியன் கடலில் போதைப்பொருள் கடத்த முயன்றவர்கள் மீது அமெரிக்க ராணுவம் நடத்திய தாக்குதலில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

5. உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா இன்று அல்ஜீரியாவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஸ்விட்சர்லாந்த் அதிபர் திரு. **Guy Parmelin**-னுடன் இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் வர்த்தகம், முதலீடு, அறிவியல், தொழில்நுட்பம், புத்தாக்கம், கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பது குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

முன்னதாக, மூன்று நாள் அரசு முறைப்பயணமாக இன்று காலை ஸ்விட்சர்லாந்த் அதிபர் திரு. **Guy Parmelin** புதுதில்லி வந்தடைந்தார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவருடன் புதுதில்லியில் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியா — சுவிட்சர்லாந்து இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பது குறித்து விவாதித்ததாக கூறியுள்ளார்.

இன்று மாலை ஸ்விட்சர்லாந்து அதிபர் திரு. **Guy Parmelin**, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

<<<<<<>>>>>>

இந்தியா — அமெரிக்கா இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற Munich தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

தற்போது இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் இந்தியாவுக்கு சாதகமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த பேச்சுவார்த்தையின் மூலம், வர்த்தக குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், 200 கோடி மக்களின் பொருளாதார எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், உலக ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் 25 சதவீதம் இதில் அடங்கும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட அனைத்துத்துறைகளிலும் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கட்டுரையில், நுகர்வோர் மற்றும் வர்த்தகர்கள் பயன் அடையும் வகையில் சரக்கு மற்றும் சேவை வரியில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரியில், ஒரு கோடியே 70 லட்சம் பதிவுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது கடந்த ஆண்டைவிட 15 சதவீதம் அதிகம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் சரக்கு மற்றும் சேவை வரியில் புதிய நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில் குழு கூட்டத்திற்கு முன்பாகவே அடுத்தக்கட்ட சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

சீக்கிய குரு, குருநானக் தேவ்-வின் முக்தியடைந்த நாளான இன்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், குருநானக் தேவ் உண்மை, மனிதநேயம், அன்பு போன்றவற்றை மக்களிடையே எடுத்துச்சென்றவர் என்றும், சமூக அநீதிக்கு எதிராக குரல் கொடுத்தவர் என்றும் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மதுராந்தகம் மற்றும் தாராபுரத்தில் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை காலை 7 மணி முதல், ஆறு மணிவரை நடைபெறும் என்று தலைமை தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.

வாக்குப்பதிவு முடியும் வரை சட்டம் — ஒழுங்கை பாதுகாப்பதற்கும், மக்கள் வாக்களிப்பதற்கும் ஏதுவாக இடைத்தேர்தல் நடைபெறும் பகுதிகளில் நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் ஆர்வத்துடன் தங்களது வாக்குகளை பதிவு செய்வதற்கு முன்வர வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>>

“மக்கள் நலனே தேசத்தின் நலன்” என்பதை, தாரக மந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, **25** ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக மத்திய அரசின் ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு திட்டம் மூலம் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருகிறது.

இது தொடர்பான சிறப்புத் தொகுப்பில் இன்று மிசோரம் மாநிலம் **Lunglei** ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு திட்டம் இடம்பெறுகிறது,

***(வாய்ஸ் ஓவர் - Voice - 90 Sec.)***

*(**Mizoram** மாநிலம் **Lunglei** மாவட்டத்தில் வாழை விவசாயிகள் மத்திய அரசின், “ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு” திட்டத்தின்கீழ் வாழைப்பழ அடிப்படையிலான விளைப்பொருட்களை விற்பனை செய்து **3** கோடியே **78** லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டியது.*

***Lunglei** மாவட்டத்தில் “ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு” திட்டத்தின்கீழ் வாழைப்பழம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.*

*இதனையடுத்து, அம்மாவட்டத்தில் வாழை சாகுபடியை ஊக்குவிக்க அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.*

*வாழைப்பழச்சாறு, வாழைக்காயில் இருந்து **Chips** மற்றும் உணவுப் பொருட்கள் விற்பனை செய்து வருகிறது.*

*Mizoram தோட்டக்கைலைத்துறையுடன் ஆலோசனை நடத்திய பின், வாழை சாகுபடி நடத்த Lunglei மாவட்ட நிர்வாகம் முடிவெடுத்துள்ளதாக, அம்மாவட்ட துணை ஆணையர் திருமதி. Navneet Mann தெரிவித்துள்ளார்.*

*இப்பகுதியில் வாழை சாகுபடி செய்ய தேவையான சூழல் நிலவுவதாக தோட்டக்கலைத்துறை கண்டறிந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு போதிய உதவிகள் அளித்து வருவதாகவும் வாழைப்பழசாறு, வாழைக்காய் சிப்ஸ் தயாரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.*

*அரசு கண்காட்சிகளில் சிறப்பு அரங்குகளில் இந்த விளைபொருட்கள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் திருமதி. Navneet Mann தெரிவித்துள்ளார்.*

*Lunglei மாவட்டத்தில் 17 கிராமங்களில் தற்போது வாழை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் 400 விவசாய குடும்பங்கள் பயன் அடைந்து வருகின்றன.*

*''ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு திட்டம்'' மூலம் அம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

<<<<<<>>>>>>

கரீபியன் கடலில் போதைப்பொருள் கடத்த முயன்றவர்கள் மீது அமெரிக்க ராணுவம் நடத்திய தாக்குதலில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்க தெற்கு ராணுவ கமாண்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில், போதைப்பொருட்களை கடத்திச் சென்ற படகு மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறியுள்ளது.

தெற்கு அமெரிக்காவிலிருந்து போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாக கூறி, இவர்கள் மீது ராணுவம் தாக்குதல் நடத்தியது.

இந்த கடல் பகுதியில், கடந்த ஓராண்டில் போதைப்பொருள் கடத்துபவர்கள் மீது அமெரிக்க ராணுவம் நடத்திய தாக்குதலில் **235** பேர் உயிரிழந்துள்ளனர்.

<<<<<<>>>>>>

எகிப்தில் உள்ள சிவப்புக்கடல் பகுதியில் கடல் நீருக்கான உரிமை தங்களுக்கு தரப்பட வேண்டும் என்று எகிப்து, சூடான், எரித்திரியா மற்றும் சோமாலியா நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இதற்கான கூட்டறிக்கையையும் அந்நாடுகளின் தலைவர்கள் வெளியிட்டுள்ளனர்.

இந்த பகுதிகளுக்குள் மற்ற நாடுகளின் தலையீடுகளை ஏற்க முடியாது என்று கூட்டு பிரகடனம் தெரிவிக்கிறது.

சர்வதேச சட்டத்தின்படி சிவப்புக்கடல் பகுதி உரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நைல் நதி உள்ளிட்ட பகுதிகளில் வேறு நாடுகளின் தலையீடு சட்ட விரோதமாக கருதப்படும் என்றும் கூட்டு பிரகடனம் தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

பிரேசில் அதிபர் தேர்தலில் முதல் சுற்றில் **Flavio Bolsonaro** வெற்றி பெற்றுள்ளார்.

தற்போதைய அதிபர் **Luiz Lula da Silva**-க்கு எதிரான தேர்தலில் **50** சதவீதத்திற்கு மேல் வாக்குகள் கிடைக்காதால் வரும் **25** ஆம் தேதி மீண்டும் வாக்கெடுப்பு நடைபெற உள்ளது.

பதிவான வாக்குகளில் **98** புள்ளி எட்டு ஒன்று சதவீதம் வாக்குகள் எண்ணப்பட்டுள்ள நிலையில், **Flavio Bolsonaro**-க்கு

**47** புள்ளி இரண்டு நான்கு சதவீத வாக்குகளும், **Luiz Lula**க்கு **44** புள்ளி ஒன்பது ஒன்று சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளது.

பிரேசில் அதிபர் தேர்தல் முறையில் முதல் சுற்றிலேயே வெற்றி பெறுவதற்கு **50** சதவீதத்திற்கும் மேல் வாக்குகள் பெற வேண்டும்.

இரண்டு அதிபர் வேட்பாளர்களும் மீண்டும் இரண்டாவது சுற்றில் போட்டியிட உள்ளனர்.

<<<<<<>>>>>>

தமிழகம், கர்நாடகா, கேரளம், மாஹே, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அடுத்த **24** மணிநேரத்தில் மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மகாராஷ்ட்ராவின் விதர்பா மற்றும் மராத்வாடா பகுதிகளிலிருந்து தென்மேற்கு பருவமழைக்காலம் முடிவடைவதையொட்டி, அடுத்த

இரண்டு நாட்களுக்கு மகாராஷ்ட்ரா மாநிலம் மற்றும் சட்டீஸ்கரில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

லட்சத்தீவு, உத்தராகண்ட், தெலங்கானா மற்றும் மேற்குவங்கத்தின் சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா — அல்ஜீரியாவை எதிர்கொள்கிறது.

இந்திய அணியில் **Tanvi Reddy, Nischal Chand, Parul Choudhary** உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

**D-**ஒன் பிரிவில் இந்தியா, பெரு, அல்ஜீரியா அணிகள் இடம்பெற்றுள்ளன.

<<<<<<**END**>>>>>>